# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண்.168/ந/2025, நாள் 28.04.2026**

வி. நல்வினை செல்வன்,
இராசிபுரம், நாமக்கல் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
இராசிபுரம் நகராட்சி, நாமக்கல் மாவட்டம். – எதிர்மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம், கட்டனாச்சம்பட்டி, ஸ்ரீ மகாலட்சுமி நகர், எண்.4–அ என்கிற முகவரியில் வசிக்கும் திரு. வி. நல்வினை செல்வன் என்பவரது 17.03.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.03.2025 அன்று பெறப்பட்டு, 168/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம், கட்டனாச்சம்பட்டி, ஸ்ரீ மகாலட்சுமி நகர், எண்.4–அ என்கிற முகவரியில் வசிக்கும் திரு. வி. நல்வினை செல்வன் என்பவரின் 17.03.2025 நாளிட்ட முறையீட்டு மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள 11.11.2024 நாளிட்ட மனு நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முகவரியிடப்பட்டது. மேற்படி மனு, மனுதாரர் ''இராசிபுரம் மக்கள் நலக்குழு'' என்ற அமைப்பின் செயலாளர் நிலையில் அனுப்பப்பட்டதாகும். இம்மனுவில் மனுதாரர் கீழ்க்காணும் புகார்கள் தெரிவித்துள்ளார்.

"நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டத்தில் இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட நகரின் மைய பகுதியில் தற்போது புதிய பேருந்து நிலையம் அனைவருக்கும் பயன்படும் வகையில் சிறப்பாக இயங்கிவருகிறது. இந்நிலையில் இராசிபுரம் நகராட்சி நிர்வாகம் மீண்டும் ஒரு பேருந்து நிலையத்தினை உருவாக்க திட்டமிட்டு தனியார் நில உரிமையாளரான படைப்பா நகர் பாஸ்கர் என்பவரிடமிருந்து 7.3 ஏக்கர் நிலத்தினை மறைமுகமாக பொது அறிவிப்புமின்றி தானமாக பெற்று மேற்படி கூடுதலாக ஒரு பேருந்து நிலையம் ஏற்படுத்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதற்காக இராசிபுரம் நகராட்சி நிர்வாகத்தின் மூலம் அவசர கதியில் ஓர் கருத்து கேட்புக் கூட்டம் என்ற பெயரில் ஒரு அவசரக் கூட்டத்தினை 05.07.2024 மாலை 4 மணிக்கு திமுக மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். ராஜேஸ்குமார் முன்னிலையில் நகர்மன்ற தலைவர் கவிதாசங்கர் தலைமையில் நகராட்சி ஆணையாளர் அவர்கள் நடத்தினர். இக்கூட்டம் மாலை 4 மணி அளவில் நடைபெறுவதற்கு முன்பே காலையிலேயே தனியார் நில உரிமையாளரிடம் கமுக்கமாக நகராட்சிக்கு 7.3 ஏக்கர் நிலத்தை இராசிபுரம் சார் பதிவாளர்

அலுவலகத்தில் நகராட்சி ஆணையாளர் பெயரில் தானமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 30 ஆண்டுகாலமாக விற்பனையாகாமல் கிடந்த நிலத்தை தனியார் நில விற்பனையாளர் படையப்பபா நகர் பாஸ்கர் தமது சுமார் 200 ஏக்கர் நிலத்தின் மையப்பகுதியில் 7.3 ஏக்கர் நிலத்தினை மீண்டும் ஒரு பேருந்து நிலையம் அமைக்க தானமாக கொடுத்துள்ளதை தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

மேலும் மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். ராஜேஸ்குமார் அவர்கள் திடீரென அவசரமாக நடத்திய கூட்டத்தில் தற்போதைய இராசிபுரம் தொகுதியின் உறுப்பினர் அமைச்சர் மாண்புமிகு மா. மதிவேந்தன் அவர்கள், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வி.எஸ். மாதேஸ்வரன் அவர்கள், தொகுதியின் முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் சட்டமன்ற – நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைத்து கட்சிகளின் பிரநிதிகள் யாருக்கும் முறையாக அழைப்பு விடப்படாத அவசர கதியில் ஓர் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றுள்ளதை தங்கள் மேலான பார்வைக்கு தெரிவிக்கின்றோம்.

தற்போது அனைத்து பொதுமக்களுக்கும், வணிகர்களுக்கும், கிராமபுற விவசாயிகளுக்கும், பள்ளி – கல்லூரி மாணவர்களுக்கும் பெரிதும் பயன்பாடு கொண்டு திகழும் இராசிபுரம் நகர மையப்பகுதியில் அமைந்துள்ள பேருந்து நிலையத்திற்கு மாற்றாக அனைவரின் எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாது மீண்டும் ஒரு பேருந்து நிலையம் அமைவதை பொதுமக்கள் அனைவரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர் என்பதை சமூகம் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

அனைத்து அரசியல் கட்சிகள், இராசிபுரம் மக்கள் நலக்குழு, வணிகர்கள், பொதுமக்கள் இணைந்து 18.07.2024–ல் ஒரு நாள் கடையடைப்பு போராட்டம் முழுமையாக நடத்தி தங்கள் எதிர்ப்பினை தெரிவித்துள்ளனர்.

இராசிபுரம் மக்கள் நலக்குழுவின் சார்பாக அறவழியில் மனித சங்கிலி போராட்டம் 20.07.2024–ல் நடத்தப்பட்டுள்ளது.

இணைய வழியில் ஒப்பந்த புள்ளி கோருவதை கண்டித்து 22.10.2024–ல் பொதுமக்கள் அனைவரும் கருப்பு பேட்ஜ் அணிந்து தமது எதிர்ப்பினை தெரிவித்தனர். தொடர்ந்து அனைத்துக் கட்சிகளை சார்ந்த தலைவர்கள் இத்திட்டத்தினை கைவிடக்கோரி அறிக்கைகள் வெளியிட்டு வருகின்றனர்.

இராசிபுரம் நகராட்சியும், திமுக மாவட்ட செயலாளரும் சிறப்பாக இயங்கும் தற்போதைய புதிய பேருந்து நிலையத்திற்கு மாற்றாக மீண்டும் ஒரு பேருந்து நிலையத்தினை அமைத்தால் அரசு பெரும் நிதி இழப்பை சந்திக்க நேரிடும் என்பது பொதுமக்களின் குற்றச்சாட்டு.

தற்போது அமைய உத்தேசித்துள்ள பேருந்து நிலையம் அணைப்பாளையம் ஏரியுடன் இணைந்த தனியார் நிலமான படையப்பா நகர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள் மழை வெள்ள காலங்களில் தண்ணீரில் மூழ்குவதும், சதுப்பு நிலமாக மாறும் நிலங்களாகும். இப்பகுதியை உள்ளடக்கிய கிராம மக்கள் மழைக்காலங்களில் பெரும் அவதிக்குள்ளாகும் நிலப்பகுதியாகும்.

சேலத்தில் உள்ள உதவித் தீர்வு அலுவலர் RBI / Sec 11 (a) Rasipuram / 1968-ல் 19.06.1971 தேதியிட்ட அவரது உத்தரவில் விதித்த நிபந்தனைகள் சரியாக கடைபிடிப்பதை உறுதி செய்ய வேண்டும்.

நீர் மூழுகும் பகுதி, ஓடும் பகுதி, நீர் பிடிப்பு பகுதி, ஆயக்கட்டுப் பகுதி, போன்றவை ரியல் எஸ்டேட் பகுதிகளாக மாற்றாமல் கவனமாக இருப்பதில் எந்த லே–அவுட் அனுமதி வாழங்கப்பட்டாலும் பதிலளிப்பவர்கள் தொடக்க நிலையிலேயே தடுக்கவும், வீடுகள் கட்ட மக்களை அனுமதிக்கவும் கூடாது. நீரில் மூழ்கிய பகுதிகள் மற்றும் நீர்நிலைகள், அதன் பின் சமபங்கு உரிமை கோருவது, அதனால் ஏற்படும் உயிர் இழப்புகளை தடுப்பதும் அரசின் கட்டுப்பாடான கடமையாகும் என தெரிவிக்கின்றது.

1971 பிரிவு 47A இன் கீழ் விதி–6 இன் படி நிலம் சாகுபடிக்கு ஏற்றதாக இருந்தால் அதை மனைகளாக உருவாக்க முடியாது.

ஆனால் ரியல் எஸ்டேட் மீதான லாப நோக்கத்தில் பேராசை கொண்டு பட்டா நிபந்தனைகள் இருந்த போதிலும் சுமார் 26 ஆண்டுகளாக மெதுவாக இந்த ரியோட்டி நிலங்களில் அதிகாரிகள் இடையூறு மற்றும் சட்ட விரோத வளர்ச்சியை அனுமதித்ததின் மூலம் ஏரியின் மறுபுறத்தில் உள்ள ஆயக்கட்டு நிலங்களை ரியல் எஸ்டேட்டாக மாற்ற அதிகாரிகள் அனுமதி தந்துள்ளனர். இதன் அடிப்படையில் தான் படையப்பா நகர் உருவாகி உள்ளது. கடந்த 26 ஆண்டுகளாக சுமார் 200 ஏக்கர் தமது நிலம் விற்பனையாகமல் கிடந்த நிலையில் அதன் மையப்பகுதியில் தற்போது பேருந்து நிலையம் இராசிபுரம் நகராட்சியால் உருவாக 7.3 ஏக்கர் நிலத்தினை இதில் இருந்து தானமாக நகராட்சிக்கு வழங்கியதன் லாபநோக்கம் வெளிப்படுகிறது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் 11.04.2023 அன்று அறிவிக்கப்பட்ட ரிட் மனு மீதான வழக்கில் மாண்புமிகு திரு. பி. ராஜா தலைமை நீதிபதி மற்றும் மாண்புமிகு திரு. நீதியரசர் டி.பார்த்த சக்கரவர்த்தி 2022 இன் WP எண் 32539 மற்றும் 2022 இன் WMP எண் 31942 படி...

அணைப்பாளையம் ஏரியின் மூன்று மதகுகள் வழியாக சாதாரண அளவை விட அதிகமாக உள்ள நீரை திறந்து விட முதல் எதிர் மனுதாரர்கள் உத்தரவிடக்கோரி சந்திரசேகரபுரம் கிராம பஞ்சாயத்து தலைவர் இந்த ரிட்மனுவை தாக்கல் செய்ததில் சந்திரசேகரபுரம் கிராமத்தில் 8000 பேர் வசிக்கின்றனர். அதே சமயம் அணைப்பாளையம் கிராமத்தில் 800 பேர் வசிக்கின்றனர். அணைப்பாளையம் கிராமத்தில், 126 ஏக்கர் பரப்பளவில் ஏரி உள்ளது. அணைப்பாளையம் கிராமம் ரயோத்வாரி கிராமமாக இருந்தபோது, சந்திரசேகரபுரம் கிராமம் மிட்டாக இருந்தது. அப்போது தமிழ்நாடு எஸ்டேட்ஸ் (அபோலிஷன் மற்றும் ரியாத்வாரியாக மாறுதல்) சட்டம், 1948 அமுலுக்கு வந்தது. அப்படி இருக்கும் போது அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட பிறகு, சந்திரசேகரபுரம் கிராமத்தில் சுமார் 500 ஏக்கர் நிலங்கள் இருப்பதாகக் கூறப்பட்ட குறிப்பிட்ட நிலங்களில் இந்த நிலங்கள் நீரில் மூழ்கும் அபாயம் இருப்பதாகக் கூறி அதிகாரிகளால் ரயோத்வாரி பட்டா மறுக்கப்பட்டது.

பட்டாதாரர்கள் தடுப்பணைகள் அமைக்கவோ, தொட்டியின் நீர்மட்டத்தை பாதிக்கும் வகையில் கால்வாய்களை தூர்வாரவோ கூடாது. அணைப்பாளையம் குளத்தில் ஆயக்கட்டுதாரர்களின் உரிமைகளை பாதிக்கும் வகையில் பட்டாதாரர்கள் புதிய நிபந்தனைகளை விதிக்கூடாது. தண்ணீர் தேங்குவதை எந்த வகையிலும் தடுக்க கூடாது. எவ்வாறாயினும், அதன் பின்னர் அதிகாரிகள் மற்றும் நிலத்தின் உரிமையாளர்கள் மேற்கண்ட நிபந்தனைகளை மறந்துவிட்டதாக தெரிகிறது. மேலும் தற்போது முழுப் பகுதியும் குடியிருப்பு வீடுகள் மற்றும் பயிர்ச்செய்கை இரண்டையும் கொண்ட கலவையான வளர்ச்சியைக் கொண்டுள்ளது.

இந்த குடியிருப்பாளர்கள் மற்றும் விவசாயிகளின் வழக்கு என்னவென்றால் ஏரியின் அசல் ஆயக்கட்டுப் பகுதியின் ஒரு "**படையப்பா டெவலப்பர்கள்**" ஏற்கனவே 190 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களை ரியல் எஸ்டேட் / வீடு தளங்களாக மாற்றியுள்ளனர். இதன் காரணமாக தற்போது சுமார் 100 ஏக்கரில் பயிரிடப்படுகிறது. அதனால் தண்ணீர் தேவை குறைந்துள்ளது. இது தவிர ராசிபுரம் டவுன் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால் மூலம் அருகில் உள்ள நீர்நிலைகளுக்கு தண்ணீர் வந்து, மீண்டும் கால்வாய்கள் மூலம் அணைப்பாளையம் ஏரிக்கு வருகிறது. இதனால் அணைப்பாளையம் ஏரியில் தேவைக்கு அதிகமாகவும், அதிகபட்ச கொள்ளளவை விடவும் அதிகளவு தண்ணீர் தேக்கி வைக்கப்படுகிறது.

அதே மூச்சில், இதுவும் ஒரு உன்னதமான வழக்கு, இது அம்பலப்படுத்துகிறது. ஞானத்தின் மீது அறியாமையின் வெற்றி, ரியல் எஸ்டேட் / வாழ்க்கையின் மீதான லாபத்தின் பேராசை இயற்கை. பட்டா நிபந்தனைகள் இருந்தபோதிலும், இத்தனை ஆண்டுகளாக, மெதுவாக, இந்த ரியோட்டி நிலங்களில், அதிகாரிகள் இடையூறு மற்றும் சட்டவிரோத வளர்ச்சிகளை அனுமதித்தனர். அலட்சியம் எவ்வளவு பெரிய எழுத்தாக உள்ளது என்றால், பஞ்சாயத்து போர்வெல் போன்ற அரசு

வசதிகள், சாலைகள் போடுவது போன்ற அனைத்தும் இந்த நீரில் மூழ்கும் பகுதியில் செய்யப்பட்டுள்ளன. அதே போன்று தமிழ்நாட்டின் வறண்ட மற்றும் விவசாயம் செய்யாத நிலங்கள், குடியிருக்கவும், ரியல் எஸ்டேட் செய்யவும் மிகவும் ஏற்றதாக இருக்கும் போது ஏரியின் மறுபுறத்தில் உள்ள ஆயக்கட்டு நிலங்களை ரியல் எஸ்டேட்டாக மாற்ற அதிகாரிகள் அனுமதித்துள்ளனர்.

“6 கலெக்டரின் முன்ஒப்புதல் வழங்குவதற்கு பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்கள்:

அபிவிருத்தி முன்மொழியப்பட்ட நிலம் பின்வரும் வகைகளில் எதிலும் அடங்காது என்று ஆட்சியர் தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்ள வேண்டும், அதாவது,

(அ) வாய்க்கால், கால்வாய், தொட்டி, ஏரி, ஆறு போன்ற பொது நீர்நிலைகள்.

(ஆ) அரசு புறம்போக்கு நிலம், கோயில் நிலங்கள், வக்ஃப் சொத்துக்கள் மற்றும் மத / தொண்டு நிறுவனங்களுக்குச் சொந்தமான பிற நிலங்கள்.

(இ) பொதுச் சாலை அல்லது தெரு அல்லது விண்ணப்பதாரருக்கு உரிமை இல்லாத வேறு எந்த நிலத்திலும் ஏதேனும் ஆக்கிரமிப்பு உள்ள காலி நிலங்கள்.

(ஈ) டவர் லைன்கள் உட்பட உயர் பதற்றம் மற்றும் கூடுதல் உயர் மின்னழுத்த மின் பாதையின் சீரமைப்புக்கு கீழே உள்ள நிலங்கள்

(உ) தொடர்ந்து சாகுபடி செய்வதற்கு ஏற்ற நிலம் (முக்கியத்துவம் அளிக்கப்பட்டது) மேற்கூறிய விதிகளின்படி, ஆயக்கட்டு நிலங்களை எப்படி வீட்டு மனைகளாக / விவசாயம் அல்லாத பயன்பாட்டிற்கு மாற்றுவது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியவில்லை. சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் மேலும் நிலையான வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளை வீட்டுவசதி அல்லது பிற நோக்கங்களுக்கான தேவை மீறாமல் பார்த்துக் கொள்வது மாநில அதிகாரிகளின் கடமையாகும் என தெரிவிக்கின்றது.

ஏற்கனவே இராசிபுரம் நகரில் புதிய பேருந்து நிலையம் நல்ல முறையில் அனைவருக்கும் பயன்படும் வகையில் இயங்கி வரும் நிலையில் உள்ள பேருந்து நிலையத்திலிருந்து 9 கி.மீ கடந்து அணைப்பாளையம் கிராம பஞ்சாயத்தில் கூடுதலாக ஒரு பேருந்து நிலையம் கட்ட திட்டமிடுவதும், அதுவும் அணைப்பாளையம் ஏரியின் இணைப்பு பகுதியான நீரில் மூழ்கும் நில பகுதி என தெளிவாக தெரிந்தும், பன்னெடுங்காலமாக ஏரி, மதகு, நீர் ஓடும் பகுதி, மழைகாலங்களில் வெள்ளமாக மூழ்கும் நிலப்பகுதி என சென்னை உயர்நீதி மன்றத்தில் முறையிட்டுள்ளதும், அதிகபடியான நீரில் இருந்து மக்களையும், பயிர்களையும், கால்நடைகளையும் காப்பாற்றி கொள்ள நீதிமன்றத்தில் முறையிட்டு தீர்வு காணுகின்ற நிலையெல்லாம் உள்ளதை தெளிவாக அறிந்தும், அனைத்து அரசியல் கட்சிகள், சேவை அமைப்புகள், வணிகர்கள், இராசிபுரம் மக்கள் நலக்குழு மற்றும் பொதுமக்கள் அனைவரும் தொடர்ந்து மீண்டும் கூடுதலாக ஒரு பேருந்து நிலையம் வேண்டாம் என போராடி வரும் நிலையில் இராசிபுரம் நகரின் நலனை கருத்தில் கொண்டும், அரசுக்கு பெரும் பொருளாதார இழப்பினை ஏற்படுத்தும் இந்த தனியார் நில முதலாளிகளின் வளர்ச்சிக்கான மாற்று பேருந்து நிலையம் அமைவதை தொடக்க நிலையிலேயே தடுத்து நிறுத்த வேண்டுமாய் சமூகம் அவர்களை கேட்டுக்கொள்கிறோம்.” என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 23.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் இராசிபுரம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. இராசிபுரம் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.1890/24/இ1/எப்1, நாள் 28.01.2026–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்ட விளக்கம் அளித்துள்ளார்.

“இராசிபுரம் நகரில் தற்போது உள்ள பேருந்து நிலையம் 31 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதாகும். தற்போது இப்பேருந்து நிலையத்திற்கு வரும் பேருந்துகள் நகர் வளர்ச்சி

அடைந்த காரணத்தினால், ஒரு வழி பாதையாக உள்ளதாலும் குறுகிய சாலைகளாக உள்ள காரணத்தாலும், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பள்ளி கல்லூரி வாகனங்கள் குறித்த நேரத்திற்கு செல்ல இயலாமல் காலதாமதம் ஏற்படுகிறது. மேலும் பெங்களூர், சென்னை மற்றும் கோயம்புத்தூர் செல்லும் இராசிபுரத்தை சார்ந்த பயணிகள் கன்னியாகுமரி பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஆண்டகலூர் கேட் பஸ் நிறுத்தத்தில் இறங்கி வருகின்ற காரணத்தினால் இரவு நேரங்களில் மிகவும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். புதியதாக ஆண்டகலூர் கேட் அருகில் அனைத்து வகையான வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைவது அத்தியாவசியமாகிறது. அதன் அடிப்படையிலே 02.07.2024–ம் தேதி அன்று நகர்மன்றம் நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி பெறுவதற்கு தீர்மான எண்.580 நாள் 02.07.2024 நிறைவேற்றப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக இராசிபுரம் நகரின் அரசு அலுவலர்கள், வணிகர்கள், முக்கியஸ்தர்கள், சேவை அமைப்புகள் இணைந்து ஆலோசனைக் கூட்டம் 05.07.2024 மதியம் நடைபெற்றது. அதன் அடிப்படையில் பாஸ்கர் என்பவர் அணைப்பாளையம் கிராமத்தில் சர்வே எண்.116, 117, 118, 41–ல் உள்ள 7.03 ஏக்கர் நிலம் பத்திரப்பதிவு செய்து தானமாக நகராட்சிக்கு வழங்கப்பட்டது.

அதன் அடிப்படையிலேயே பொதுமக்கள் நலன் கருதி முறையாக மதிப்பீடு தயார் செய்து கலைஞர் நகர்ப்புற மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ.10.58 கோடி மதிப்பீட்டிற்கு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். G.O. (4D) No.28 அரசாணையின்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக 13.09.2024–ல் தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குனரிடம் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, இதன் அடிப்படையில் 21.10.2024 தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த விலைப்புள்ளி வழங்கிய அசோக் கன்ஸ்ட்ரஷன் அவர்களுக்கு 18.11.2024–ம் தேதி அன்று பணியாணை கொடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

05.07.2024 அன்று நடைப்பெற்ற கருத்து கூட்டத்திற்கு நகராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு துறை அலுவலர்கள், அனைத்து வணிகர் சங்கங்கள் மற்றும் அனைத்து பொது நலக்குழுக்கள் ஆகியோருக்கு முறையாக அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டு அதன் அடிப்படையில் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றது.

மேலும் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் உள்ளூர் பொதுமக்களிடம் கருத்து கேட்பு எழுத்து பூர்வமாக கேட்கப்பட்டதற்கு 4444 விண்ணப்பங்கள் புதிய இடத்தில் பேருந்து நிலையத்திற்கு ஆதாரவாகவும் 3165 விண்ணப்பங்கள் எதிராகவும் வரப்பெற்றது.

மேற்கண்ட நிலத்தில் கடந்த 5 ஆண்டுகளுக்கு எவ்வித விவசாய பணிகள் நடக்காமல் வறண்ட நிலமாகவே உள்ளது. மேலும் இப்பேருந்து நிலையம் கட்டுமான பணிக்கு விவசாய நிலம் எதுவும் பயன்படுத்தவில்லை. தற்போது இந்த நிலங்கள் தானமாக பெறப்பட்டு சர்க்கார் புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பேருந்து நிலையம் அமைப்பதற்கு எதிராக W.P.No. 38971/24, 39839/24, 1482/25, 2646/25 வழக்குகள் சென்னை உயர் நீதி மன்றத்தில் தொடரப்பட்டதில், திரு. V. பாலசுப்ரமணி (1482/25) என்ற வழக்கிற்கு ரூ.25,000/– அபராதமும் மற்றும் A. மாயக்கிருஷ்ணன் (2646/25) மனுதாரர் தாமாகவே வழக்கினை வாபஸ் செய்ததாலும், இவ்விருவழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டு இராசிபுரம் நகராட்சிக்கு சாதகமாக 13.02.2025 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. மேலும் திரு. ஜோதிபாசு (38971/24) மற்றும் திரு. அருள் (39839/24) ஆகியோர் தொடர்ந்த வழக்கில், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்கள் இருதரப்பினர் மற்றும் பொதுமக்களிடம் விசாரணை மேற்கொண்டு அதன் அறிக்கை உயர்நீதி மன்றத்தில் 08.09.2025 அன்று அளிக்கப்பட்டதன் பேரில் உயர்நீதி மன்றம் மேற்கண்ட வழக்குகளை இரத்து செய்து நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டதை தொடர்ந்து தற்போது பேருந்து நிலைய பணிகள் நடைப்பெற்று வருகிறது என்ற விவரம் பணிவுடன் சமர்பிக்கப்படுகிறது.”.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான இராசிபுரம் நகராட்சி ஆணையர் ஆகியோரை 03.02.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.01.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. வி. நல்வினைசெல்வன் என்பவருடன் திரு. மாதேஸ்வரன், மற்றும் திரு. K.S.A. வெங்கடாச்சலபதி ஆகியோர் 03.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர். அதில்–

“நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட நகரின் மையப்பகுதியில் உள்ள புதிய பேருந்து நிலையம் அனைவரும் பயன்படும் வகையில் சிறப்பாக இயங்கி வரும் நிலையில், இராசிபுரம் நகராட்சி தனியார் நில உரிமையாளரிடமிருந்து 7.3 ஏக்கர் நிலத்தினை மறைமுகமாக, பொது அறிவிப்புமின்றி தானமாக பெற்று, அனைவரின் எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாமல் மீண்டும் ஒரு புதிய பேருந்து நிலையத்தினை உருவாக்க திட்டமிட்டுள்ளது. 30 ஆண்டுகாலமாக விற்பனையாகாமல் கிடந்த படையப்பா நகர் நில உரிமையாளரின் சுமார் 200 ஏக்கர் நிலத்தின் மையப்பகுதியில் 7.3 ஏக்கர் நிலத்தை (நில உரிமையாளர் படையப்பா நகரைச் சேர்ந்த திரு. பாஸ்கர்) நகராட்சிக்கு தானமாக வழங்கும் பொருட்டு நகராட்சி ஆணையர் பெயருக்கு இராசிபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மூன்று மாதகாலமாக (ஏப்ரல் 2024 முதல் ஜுன் 2024 வரை) நகர்மன்றக் கூட்டத் தொடர் நடத்தப்படாமல் உறுப்பினர்களிடம் கையெழுத்து பெறப்பட்டு பேருந்து நிலையத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பது தவறான செயலாகும்.

புதியதாக திட்டமிடப்பட்டுள்ள பேருந்து நிலையம் தனியார் நிலமான படையப்பா நகரில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடமாகும். இது அணைப்பாளையம் ஏரியுடன் இணைந்து உள்ளதால் மேற்படி இடம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள் மழை வெள்ள காலங்களில் தண்ணீரில் மூழ்கும் நிலையுள்ளது. Town and Country Planning Act,1971 பிரிவு 47A-ன் கீழ் விதி –6ன்படி நிலம் சாகுபடிக்கு ஏற்றதாக இருந்தால் அதை மனைகளாக உருவாக்க முடியாது. ஆனால் ரியல் எஸ்டேட் மீதான லாப நோக்கில் பேராசை கொண்டு பட்டா நிபந்தனைகள் இருந்தபோதிலும், சுமார் 26 ஆண்டுகளாக மெதுவாக இந்த நிலங்களில் அதிகாரிகள் இடையூறு மற்றும் சட்ட விரோத வளர்ச்சியை அனுமதித்ததன் மூலம் ஏரியின் மறுபுறம் உள்ள ஆயக்கட்டு நிலங்களை ரியல் எஸ்டேட்டாக மாற்ற அதிகாரிகள் அனுமதி அளித்துள்ளனர்.

எனவே, இராசிபுரம் மக்கள் நலனை கருத்தில் கொள்ளாமல் அரசுக்கு பெரும் பொருளாதார இழப்பினை ஏற்படுத்தும் வகையில் தனியார் நில முதலாளிகள் வளர்ச்சிக்காக புதிய பேருந்து நிலையம் அமைவதை தொடக்க நிலையிலேயே தடுத்து நிறுத்த வேண்டுமாய் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இராசிபுரம் நகராட்சியில் 02.07.2024 அன்று தீர்மான எண்.580 பேருந்து நிலையம் மாற்றலாம் என்று மட்டும் தான் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பிரச்சனைக்குரிய அணைப்பாளையம் கிராமத்திற்கு பேருந்து நிலையம் மாற்றலாம் என நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை.

கருத்துகேட்பு கூட்டத்தை நடத்திய இராசிபுரம் நகர்மன்ற தலைவர் 22 உறுப்பினர்களை மட்டும் அழைத்து கருத்து கேட்பு கூட்டத்தை நடத்தியது உள்நோக்கம் கொண்ட செயலாகும்.

19.04.2024 நாடாளுமன்ற தேர்தல் அன்று தேர்தல் ஆணைய கட்டுப்பாடு செயலில் உள்ள நாளுக்கு 77 நாட்களுக்கு முன்பாக வேறு ரியல் எஸ்டேட் நபரிடம் கடித போக்குவரத்து நகர்மன்ற தலைவர் செய்துள்ளார்.

நகர்மன்ற தலைமையில் முதன் முதலாக கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்ற காலையிலேயே நிலதானம் பெறப்பட்டுள்ளது.

புதியதாக பேருந்து நிலையம் அமைய உள்ள இடங்களை சுற்றி நகர்மன்ற தலைவரின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் குடும்பத்தினர் ரியல் எஸ்டேட் உரிமையாளர் பாஸ்கரிடம் நிலம் வாங்கி வைத்துள்ளனர்.

நகர்மன்றத்தால் பேருந்து நிலையம் தீர்மானம் நிறைவேற்றியதாக தெரிவிக்கும் காலமான 01.04.2024 முதல் 30.06.2024 வரை எந்த ஒரு நகர்மன்ற கூட்டமும் முறையாக நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெறவில்லை.

மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவு W.P.No.32539 of 2022 and W.M.P. No.31942 of 2022-ன் வழிகாட்டுதல்களின்படி தற்போது இராசிபுரம் நகர்மன்ற தலைவரால் பின்பற்றப்படவில்லை.

மேலும் இப்புகார் தொடர்பான வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் நாங்கள் மறு சீராய்வுக்கு வழக்கு தொடர்ந்துள்ளோம். அதன் விவரம் எங்களது வழக்கறிஞரிடம் பெற்று விரைவில் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்படும் என்பதையும் இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்." என தெரிவித்துள்ளனர்.

6) எதிர்மனுதாரரான இராசிபுரம் நகராட்சி ஆணையர் திருமதி யா. நிவேதிதா மற்றும் அவருடன் நகராட்சி உதவிப் பொறியாளர் திரு. A. ரவி, நகராட்சி இளநிலை உதவியாளர் திரு. ஸ்ரீ. கோகுல்நாத் ஆகியோர் 03.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தங்களது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளனர். அதில்–

"இராசிபுரம் நகரில் தற்போது உள்ள பேருந்து நிலையம் 31 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதாகும். இங்கு வரும் பேருந்துகள் நகர் வளர்ச்சி அடைந்த காரணத்தினால், குறுகிய சாலைகளாக உள்ளதாலும், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பள்ளி, கல்லூரி வாகனங்கள் குறித்த நேரத்திற்கு செல்ல இயலாமல் காலதாமதம் ஏற்படுவதாலும் வேறு இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க முயற்சி எடுக்கப்பட்டது. இராசிபுரம் நகராட்சி எல்லைக்குள் வேறு இடம் இல்லாததால் திரு. பாஸ்கர் அவர்கள் தானமாக கொடுத்த இடத்தில் 02.07.2024 அன்று நகர்மன்றம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறுவதற்கு தீர்மானம் எண்.580 நாள் 02.07.2024–ல் முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. திரு. பாஸ்கர் என்பவரால் நகராட்சிக்கு அணைப்பாளையம் கிராமத்தில் 7.03 ஏக்கர் நிலம் 05.07.2024–ல் தானபத்திரமாக பதிவு செய்து நகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரரால் 3 மாதகாலம் மன்ற கூட்டம் நடைபெறவில்லை எனவும் மேற்படி காலத்தில் நகர்மன்ற தலைவர் வீட்டில் கூட்டம் நடைபெற்றதாக தவறான தகவல் வழங்கியுள்ளார். மனுதாரர் தெரிவித்தபடி 2024 ஏப்ரல் முதல் ஜுன் வரை தேர்தல் காரணமாக நகர்மன்ற கூட்டம் நடைபெறவில்லை. ஜுலை மாதம் நகர் மன்றக்கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொதுமக்கள் நலன் கருதி முறையாக மதிப்பீடு தயார் செய்து கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ. 10.58 கோடி மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். G.O.(4D) No.28, அரசாணையின்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து நகர்மன்ற தீர்மான எண்.630, நாள்.23.10.2024–ன்படி பேருந்து நிலையம் கட்டுவதற்கு அனுமதி பெறப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Ashok Construction அவர்களுக்கு 18.11.2024–ம் தேதி அன்று பணியாணை வழங்கப்பட்டது.

புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு எதிராக W.P.No.38971/24 மற்றும் 1482/25, 39839/24, 2646/25 வழக்குகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்டதில் திரு. V.பாலசுப்பிரமணி (1482/25) என்ற வழக்கிற்கு ரூ.25,000/– அபராதமும் மற்றும் திரு. A. மாயக்கிருஷ்ணன் (2646/25) மனுதாரர் தாமாகவே வழக்கினை வாபஸ் செய்ததாலும்,

இவ்விரு வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டு இராசிபுரம் நகராட்சிக்கு சாதகமாக 13.02.2025 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. மேலும் திரு. ஜோதிபாசு (38971/24) மற்றும் திரு. அருள் (39839/24) ஆகியோர் தொடர்ந்த வழக்கில், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் இரு தரப்பினர் மற்றும் பொதுமக்களிடம் விசாரணை மேற்கொண்டு அதன் அறிக்கையை உயர்நீதிமன்றத்தில் 08.09.2025 அன்று அளிக்கப்பட்டதின் பேரில் உயர்நீதிமன்றம் மேற்கண்ட வழக்குகளை ரத்து செய்து நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதன் அடிப்படையில் ஆண்டகளூர் கேட் அருகில் அனைத்து வசதிகளுடன் புதியதாக பேருந்து நிலைய பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது முடிவுறும் நிலையில் உள்ளது என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்." என தெரிவித்துள்ளனர்.

7) மனுதாரரின் புகார்மனு, மனுதாரர், மனுதாரருடன் ஆஜரான திரு. மாதேஸ்வரன் மற்றும் திரு. K.S.A. வெங்கடாச்சலபதி ஆகியோரின் வாக்குமூலம், எதிர்மனுதாரரான இராசிபுரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி ஆணையர், நகராட்சி உதவிப் பொறியாளர் மற்றும் நகராட்சி இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

இராசிபுரம் நகராட்சிக்கு மையப்பகுதியில் படையப்பா நகர் பகுதியில் தனி நபரால் தானமாக வழங்கப்பட்ட 7.3 ஏக்கர் நிலத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நகராட்சி திட்டமிட்டுள்ளது என்பதும், புதிய பேருந்து நிலையம் அமைக்கவுள்ள இடம் அணைப்பாளையம் ஏரியுடன் இணைந்து உள்ளதால் மழைநீரால் சூழும் நிலையுள்ளது என்பதும், நகர்மன்றத்தில் 02.07.2024 அன்று பேருந்து நிலையம் மாற்றலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டதே தவிர அணைப்பாளையம் கிராமத்திற்கு மாற்றலாம் என தெரிவிக்கப்படவில்லை என்பதும், இப்புகார் தொடர்பான வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் மறு சீராய்வு வழக்கு தொடர்ந்துள்ளனர் என்பதும், அதன் விவரம் வழக்கறிஞரிடம் இருந்து பெற்று தெரிவிக்கப்படும் என்பதும் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

நகர் வளர்ச்சி அடைந்த காரணத்தினாலும், சாலைகள் குறுகியதாக உள்ளதாலும், போக்குவரத்து நெரிசலால் பள்ளி, கல்லூரிகளுக்கு வாகனங்கள் செல்ல காலதாமதம் ஏற்படுவதாலும், பொதுமக்கள் நலன் கருதி வேறு இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும், இராசிபுரம் நகராட்சி எல்லைக்குள் மாற்று இடம் இல்லாததால் நகராட்சிக்கு தனிநபரால் தானமாக கொடுக்கப்பட்ட அணைப்பாளையம் கிராமத்தில் 7.03 ஏக்கர் இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நகர்மன்றம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதும், புதிய பேருந்து நிலையம் அமைக்க கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ. 10.58 கோடி மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். G.O.(4D) No.28, நாள் 30.09.2024–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதும். நகர்மன்ற அனுமதியோடு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Ashok Construction நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டுள்ளது என்பதும் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

மேலும், புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு எதிராக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டு இராசிபுரம் நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு பெறப்பட்டுள்ளது என்பதும், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரால் திரு. ஜோதிபாசு மற்றும் திரு. அருள் ஆகியோர் தொடர்ந்த வழக்கில், மேற்படி இரு தரப்பினர் மற்றும் பொதுமக்களிடம் விசாரணை மேற்கொண்டு அறிக்கை அளிக்கப்பட்டதின் பேரில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு. ஜோதிபாசு என்பவரால் தொடரப்பட்ட வழக்கு எண். W.P. No. 38971/24 மற்றும் திரு. அருள் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு எண். W.P. No. 39839/24 ஆகிய இரு வழக்குகளையும் சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்து நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதும், மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் ஆண்டகளூர் கேட்

அருகில் அனைத்து வசதிகளுடன் புதியதாக பேருந்து நிலைய பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது முடிவுறும் நிலையில் உள்ளது என்பதும் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

இந்நேர்வில், இராசிபுரம் நகராட்சியின் வளர்ச்சி மற்றும் பொதுமக்கள் நலன் கருதி புதிய பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளதாகவும், நகராட்சி நிர்வாக இயக்குநரின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டத்தின் கீழ் அரசின் அனுமதியுடன் புதிய பேருந்து நிலையம் அமைவதாலும், மேற்கண்ட பேருந்து நிலையம் அமைப்பதை எதிர்த்து மாண்பமை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட பல்வேறு வழக்குகள் ஏற்கனவே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாலும், மனுதாரரின் புகார் மனுமீது மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 28–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. வி. நல்வினை செல்வன்,,
எண்.4 அ, ஸ்ரீ மகாலட்சுமி நகர்,
கட்டனாச்சம்பட்டி,
இராசிபுரம் – 637408,
நாமக்கல் மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
இராசிபுரம் நகராட்சி,
நாமக்கல் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்
இகோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றம்
சென்னை–600 032